**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.97/2009**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமசந்திரன் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்தன் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**04.03.2026**

**பி.வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2. 1ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் 3ம் பிரதிவாதியான என் மனைவிக்காகவும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கின் ஆதி உரிமையாளர் என்று நான் சொல்லும் செல்லா சாலம்மாள் மீது உரிமைக்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் எதிரிடை அனுபவ உரிமை கோரியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் எங்கள் பெயருக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் கிரைய ஆவணம் உண்மையானது இல்லை என்றாலும் அது மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

3. 15.12.2006ம் தேதியிட்ட உத்தரவின்படி 1ம் பிரதிவாதி பெயரில் இருந்த பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. மேற்படி உத்தரவில் வாதி பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 63 செண்டிற்கான பட்டா என் மனைவி பெயரில்தான் உள்ளது. இந்த வழக்கிற்கு பின்புதான் நாங்கள் பட்டா வாங்கியுள்ளோம் என்றாலும் அது

சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் மற்றொரு உரிமையாளரான கோவிந்த செட்டியிடம் 02.11.1928ல் வாதியின் தாயார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. படமேகல குப்பையா, வசந்த கோவிந்த நாயுடு ஆகியோர் வரிசை எண்.14வது இலக்க சொத்தில் உள்ள கிணறை வெட்டியுள்ளனர் என்றால் அந்த இடம் எங்கள் பகுதியிலேயே இல்லை. படமேகல குப்பையாவிற்கு கிணறில் பாதி பாகம் உள்ளது என்றால் தெரியாது.

4. படமேகல குப்பையா 1 முதல் 7 வரையில் உள்ள சொத்துக்களை அதன் உண்மையான உரிமையாளரான செஞ்சையா செட்டி என்பவரிடமிருந்து 20.05.1937ம் தேதியிட்டு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. படமேகல குப்பையா 11வது இலக்க சொத்தை 09.06.1936ல் தோட்ட கங்கையா என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. படமேகல குப்பையா 12வது இலக்க சொத்து பூர்வீக பாத்தியமானது என்றால் எனக்கு தெரியாது. படமேகல குப்பையாவிற்கு எத்தனை வாரிசுகள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. படமேகல குப்பையாவிற்கு படமேகல முனுசாமி, படமேகல வெங்கட்டயா என்ற இரண்டு மக்கள் என்றால் எனக்கு தெரியாது. 1948ல் படமேகல வெங்கட்டயா வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. படமேகல வெங்கட்டயாவின் மனைவியான ராஜம்மாளும் 21.07.2001ல் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதனால் படமேகல வெங்கட்டயாவின் சொத்துக்களுக்கு படமேகல முனுசாமிதான் ஒரே வாரிசு என்றால் எனக்கு தெரியாது.

5. படமேகல முனுசாமியின் மனைவி சாலம்மாள் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் உரிமையாளர் சாலம்மாள் 12.10.2006ம் தேதியிட்டு பதிவு செய்த தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களை வாதி ரமேஷ்தான் அனுபவித்து வருகிறார் என்றால் புல எண்.187, 188ல் உள்ள சொத்துக்களை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த உரிமையும்

இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை என்றாலும் அவை வழக்கிற்கு பின்பு எங்களால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் அவை சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்பு எங்களால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் என் மனைவிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)